பின்மாற்றத்தை நிறுத்து!

R. ஸ்டான்லி

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காய் நீ எடுக்கும் தீர்மானமே வாழ்க்கையின் மிகப்பெரிய தீர்மானமாகும். இத்தீர்மானம் உனது இவ்வுலக வாழ்வு முழுவதையும் நிர்ணயிக்கும்; இறப்புக்குப் பின்வரும் வாழ்வையும் நிச்சயிக்கும். கிறிஸ்துவோடுள்ள வாழ்வு களிப்பானது, ஆனால் கடினமானது. நெடுகவே நீ எதிர்நீச்சல்தான் போட்டுக்கொண்டிருக்கவேண்டும். பின்திரும்பிவிடுவதற்கு வரும் சோதனைகளையும், சிந்தனைகளையும் நீ வென்று வாழவேண்டும். உனது வாழ்வில் பின்மாற்றம் ஏற்படுவதைத் தடுக்கவும், பின்மாற்றத்திலிருப்போர் மறுபடியும் இயேசுவிடம் திரும்பவும் உதவுவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகிறேன். பின்மாற்றம் என்பது ஒரு தொற்றுநோய், கவனம்!

(அ) பின்மாற்றத்திற்கான காரணங்கள்

1. மேலோட்டமான மனமாற்றம்

மத்தேயு நற்செய்தி நூலின் 13ஆம் அத்தியாயத்தில் இயேசுவானவர் நான்குவித நிலங்களைக் குறித்துப் பேசியுள்ளார். அதில் பாறை நிலம் என்பது மேலெழுந்தவாரியாக மனந்திரும்புதலைக் குறிப்பிடுகிறது (வச 20,21). அதாவது, திருவசனத்தைக் கேட்கிறவன் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறான்; உடனே மனந்திரும்புகிறான். ஆனாலும் பாறைக்குள் வேர் செல்ல முடியாதே! அதாவது, வாழ்வில் இறுக்கங்களையும் இன்னல்களையும் சந்திக்கும்போது அவனால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. கிறிஸ்துவுடன் வாழ்வு என்றால் அது ரோஜா மலர்ப்படுக்கை போன்றது என்று தவறாய் எண்ணியிருந்திருக்கிறான். இயேசுவிடம் வந்துவிட்டால் பிரச்னைகள் யாவும் தீர்ந்துவிடும் என்று நினைத்திருந்திருக்கிறான். பைபிள் கூறுவதோ வேறு: அப் 14:22, ‘‘நாம் ***அநேக*** இன்னல்கள் வழியாகவே இறையரசிற்குள் நுழையவேண்டும்!’’ இயேசுவானவர் உனக்குப் பிரச்னையோ, வேதனையோ இல்லாத சொகுசு வாழ்வு தந்துவிடுவார் என்று யாராவது சொன்னால், அதுதான் உலகிலேயே மிகப்பெரிய பொய்!

2. கெட்ட தோழமை

முற்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டை விட்டு, வாக்குப்பண்ணப்பட்ட கானான் நாட்டிற்குப் பாலைவனம் வழியாய்ப் பயணித்துக்கொண்டிருக்கையில் எகிப்தின் உணவு வகைகளையே திரும்பவும் நினைக்கலாயினர் (எண் 11:4,5). அது ஏன் தெரியுமா? இஸ்ரவேல் மக்களை எகிப்தைவிட்டுப் போகும்படிக் கடவுள் பணித்தபோது, வேறு சில இனத்தவரும் அவர்களோடு புறப்பட்டனர். அவர்கள்தான் எகிப்தின் பழைய ருசியை இஸ்ரவேலருக்கு நினைப்பூட்டினர். இது உனக்குக் கல்லூரி வளாகத்திலோ விடுதி அறைகளிலோ நேரிடலாம். இறைப்பற்றில்லாத வாலிபரும் நங்கையரும் பாவக்காரியங்களுக்குள் உன்னை வசீகரிக்கலாம். அவர்களைப் புண்படுத்திவிடக்கூடாதென்று எண்ணுவதால் பழைய பாவ வழிகளுக்குள் சென்றுவிடுகிறாய். கெட்ட தோழர் கோபித்தாலும் பரவாயில்லை என்று மனவுறுதியாய் இராவிடில் நிச்சயம் தோல்வியுறுவாய்.

தீய நட்பு நற்பண்புகளைக் கட்டாயம் கெடுக்கும் (1 கொரி 15:33). இங்குதான் உனக்குப் பெற்றோர் மற்றும் மூத்தோர் உதவி தேவை. உனக்கு அறிவு வளர வளர, அவர்களை அவமதிக்கும் மனப்பான்மை ஏற்படலாம். எச்சரிக்கை! வாலிபன் இயேசுவுக்கு அசாதாரண அறிவும் ஞானமும் இருந்தும் அவர் தமது ‘‘பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்’’ (லூக் 2:47,51,52). நீ பெற்றோரை மதித்தால் பரமன் உன்மீது மகிழுவார் (யாத் 20:12; எபே 6:1-3).

3. திருமனமற்ற திருமணம்

வாலிபர் நங்கையர் பலர் பின்மாற்றமடைவது பொருத்தமற்ற நபரை மணப்பதாலேயே. திருவிவிலியம் இதில் சமரசம்பண்ணுவதே கிடையாது. இயேசுவை விசுவாசிப்போர் அவரை விசுவாசியாதோரை மணப்பதை அது தடை செய்கிறது (2 கொரி 6:14). விசுவாசிகளை ‘‘ஒளியின்’’ பிள்ளைகள் என்றும், அவிசுவாசிகளையோ ‘‘இருட்டின்’’ பிள்ளைகள் என்றும் பைபிள் அழைக்கிறது. இங்குதான் மன்னன் சாலொமோன் தவறினான். ஊருக்கு உபதேசித்த அவன் தன்னைக் காத்துக்கொள்ளாது போனான். சிலை வணக்கத்தாரை மணந்தான்; தொலைந்தான் (1 இரா 11:1-4).

நண்பா, திருமணம் என்பது உன்னை உருவாக்கும், அல்லது உருக்குலைக்கும்! இதில் கவனமின்மை கூடாது. உனக்காகக் கடவுள்

''எல்லாவற்றையும்'' நன்கு செய்து முடிப்பார் எனும் திருவாக்கை நம்பிடு (சங் 138:8). ''எல்லாவற்றையும்'' என்பது உனது திருமணத்தை உள்ளடக்காதோ? கண்டவுடன் காதல் ஆபத்து! அது மடமை. போட்டி நிறைந்த இக்காலத்தில் படிப்பிலிருந்து எதுவும் உனது கவனத்தைத் திருப்பிவிடக்கூடாது. காதலிப்பது சரியா தவறா என்ற விவாதமெல்லாம் வேண்டாம். மாணவப் பருவத்திலிருக்கும் உனக்குக் காதலிக்க நேரமில்லை என்று ஓடிவிடு. இன்று மலராய்த் தோன்றுவது நாளை முள்ளாய் மாறிவிடும்! ஏற்கனவே காதலில் விழுந்திருந்தால், படித்து முடித்து வேலையில் அமரும்வரை அது பின்னால் கிடக்கட்டும். அதுவரை தொடர்புகளைத் தவிர்ப்பது விவேகம்.

4. பொருளாசை

பணம் சம்பாதிக்கத் துவங்கிய பின்னர் அல்ல, அதற்கு முன்னரே பண ஆசை முளைத்துவிடும். உனது வாலிபப் பருவத்திலேயே பணத்தைக் குறித்த உனது மனப்பான்மையைச் சரிப்படுத்தாவிடில், வளர்ந்தபின் இந்த மாய வலைக்குத் தப்புவது சாத்தியமன்று. ''பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேர்'' என்று பைபிள் கூறுவது மிகைப் படுத்தல் அல்ல (1 தீமோ 6:10). முதிர்ந்த இறைத்தொண்டரான பவுல் என்பவர் இளைஞனான தீமோத்தேயுவுக்குக் கொடுத்த எச்சரிப்பு இது. இவ்வுலகினால் கவரப்பட்டுத் திருப்பணிக்குழுவையே விட்டுச்சென்ற தேமா என்றொருவனையும் பவுல் சுட்டிக்காட்டினார் (2 தீமோ 4:10).

துவக்கத்தில் நாம் குறிப்பிட்ட விதைக்கிறவன் உவமையை மீண்டும் கவனிக்குங்கால், இலைகளிருந்தாலும் கனி கொடுக்க முடியாது செடியை நெருக்குவது பொருளாசை எனும் முட்கள்தான் (மத் 13:22). எந்த வேலையைத் தெரிந்தெடுக்கவேண்டுமெனத் திருச்சித்தம் அறியக் கடவுளுக்குமுன் மண்டியிட்டு வேண்டிடு. துவக்கம் முதல் முடிவும், உனக்கு எது உசிதம் என்பதும் அவருக்குத்தான் முழுக்க முழுக்க தெரியும். இக்கரைக்கு அக்கரை பச்சைதான், கவனம்! முடிவு சோகமாகலாம்.

5. நல்மனச்சாட்சியின்மை

மனச்சாட்சிதான் கடவுளிடமிருந்து மனிதன் பெற்றுள்ள அரும் வரப்பிரசாதம் என்று கிறிஸ்தவர், கிறிஸ்தவரல்லாதோர் யாவரும் அறிவர். ''மனிதனின் மனச்சாட்சி கடவுள் தந்த விளக்கு'' என்கிறது திருமறை (நீதி 20:27). இருள் நிறைந்த இவ்வுலகில் என்னே ஆசீர்வாதம்! ஆனால், விளக்குக்கு எண்ணெய் ஊற்றுவதும் திரியைத் தீண்டுவதும் நமது பொறுப்புதானே? நமது மனச்சாட்சியை நாம் மழுக்கினால், நமது வாழ்க்கைப் படகை நாமே உடைத்து நொறுக்குகிறோம் என்றுதான் பொருள் (1 தீமோ 1:19).

நல்மனச்சாட்சி என்பது மகிபனுக்குமுன் மட்டுமல்ல, மனிதருக்கு முன்பும் காக்கப்படவேண்டும் (அப் 24:16). அதைச் செய்வது எங்ஙனம்? கடவுளுக்குமுன் அடிக்கடி உட்கார்ந்து, உனது இதயத்தில் பாவமேதும் உண்டா என்று ஆராய்ந்து பார். அவற்றை அவரிடம் சொல்லி இயேசுவின் திருரத்தத்தால் கழுவப்படு (எபி 9:14). சொற்கள் அல்லது செயல்களால் நீ காயப்படுத்தியோரோடு மனம்பொருந்து. காரியங்களைச் சரிசெய். இவ்விதம் உனது மனச்சாட்சியைக் கூர்மையாகவும் தெளிவாகவும் காத்துக்கொண்டால், நீ நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்த் திகழுவாய். உனது படகு எங்கும் சிக்காது!

6. மிதமிஞ்சிய தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இல்லாது வாழ்க்கையில் முன்னேற முடியாது. அதே வேளையில் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையும் கேடு. ''பின்மாறும் இதயமுள்ளவன் தனது வழிகளிலேயே திருப்தியடைவான்'' என்கிறது விவிலியம் (நீதி 14:14). இயேசுவின் சீடரில் ஒருவராகிய பேதுரு தவறியது இங்குதான். என்ன நடந்தாலும் அவரை விட்டு ஓடுவதில்லை என்று தீர்மானித்திருந்தார். நல்ல தீர்மானம்தான்; ஆனால் அவர் தனது திறனையே சார்ந்திருந்தார். ஏன் அப்படிச் சொல்லுகிறோம்? சாத்தானால் அவர் கொடுமையாய்ச் சோதிக்கப்படுவாரென்றும், அப்பொழுது அவர் தம்மைத் தெரியாது என்று சொல்லிவிடுவாரென்றும் இயேசு அவரிடம் முன்னறிவித்தபோது, இவ்விதச் சூழலில் அசையாது நிற்பதற்கான சக்தியை அவர் அவரிடம் வேண்டியிருக்க வேண்டும். அவரோ மிதமிஞ்சிய தன்னம்பிக்கையினால் சரிந்தார்.

தம்பி, தங்காய், திருமறை தரும் எச்சரிப்பைக் கவனி: ''அசையாது நிற்கிறேன் என்று எண்ணுபவன் விழுந்துவிடாதபடி கவனமாயிருக்க வேண்டும்'' (1 கொரி 10:12). அது படிப்போ, வேலையோ, எதுவாயிருந்தாலும், எல்லாவற்றிற்கும் மேலாக நீ கடவுளை நம்பியிருந்தால் இவையெல்லாவற்றிலும் உனக்குத் திருவருள் கிடைக்கும்.

7. பொறுமையிழப்பு

எல்லாமே உடனடி, திடீர், என்பதே இன்றையப் போக்கு. எப்பொழுதும் நமக்கு ஆத்திரம்தான். கடவுளைப் பொருத்தவரை இது

பொருந்தாது. அவர் பொறுமையாய்க் காத்திருக்கிறார். அவர் சரியான காரியத்தை, சரியான வழியில், சரியான நபருக்குச், சரியான வேளையில் செய்வார். நாம் அவருக்கு முந்திச்செல்ல முயலக்கூடாது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் எவ்வளவுதான் பெருகியிருந்தாலும், கடவுள் செய்யவிருப்பவைகளை நாம் துரிதப்படுத்த முடியாது. இறைவாக்குகளின் நிறைவேறுதலுக்காய்க் காத்திருக்கப் பழகியோர் பேறுபெற்றோர்! (எபி 10:35-39),

ஏதோவொரு சிக்கலில் மாட்டியிருக்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். விடுதலைக்காய் முழு மனதோடு கடவுளிடம் வேண்டிடு. உனது வேண்டலுக்கான பதில் உடனே வராது போகலாம். கடவுளுக்கு ஒவ்வாத முறைகளைக் கையாடி வெளிவந்துவிட முயலாதே. திருமறையின் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் நாம் சந்திக்கும் வாலிபன் யோசேப்பைப்போல் காத்திரு. காத்திருந்த காலத்தில் அவன் திருவார்த்தையைச் சிந்தித்துக்கொண்டேயிருந்தான்; அது அவனைப் புனிதப்படுத்தியது. கடவுள் குறிப்பிட்டிருந்த காலத்தில் அவன் சிறையிலிருந்து வெளியேறி சிம்மாசனத்தில் ஏறினான் (சங் 105:16-22). பொறுமையாயிருந்தால்தான் மனிதன் ஆகலாம்!

மக்கள் தங்களது இறைப்பற்றிலிருந்து பின்மாறுவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு. ஆனால் நாம் இங்கு குறிப்பிட்டவைதான் முக்கியமானவை. பின்மாற்றத்தை எப்படித் தவிர்க்கலாம் என்று அடுத்து கவனிப்போம். வருமுன் காப்பதுதானே மேல்?

(ஆ) பின்மாற்றத்திற்கு மாற்று மருந்து

1. விழிப்புள்ள ஜெபம்

''பாவம் செய்பவன் இறைவேண்டலை நிறுத்துவான்; இறைவேண்டல் செய்பவன் பாவம் செய்வதை நிறுத்துவான்!'' இப்பழங்கூற்று அறிவு பூர்வமானது. சிலுவையில் அறையப்படுமுன் இயேசு சென்ற கெத்செமனே எனும் தோட்டத்தில் நடந்ததை நினைவுபடுத்துவோம். அது அவருக்குச் சித்திரவதையான நேரம். சோதனையில் விழுந்துவிடாதிருக்க ''விழித்திருந்து ஜெபிக்கும்படி'' அவர் தமது சீடருக்குச் சொன்னார் (மத் 26:41). அவர்களோ அதைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டதால் நடந்ததை நாமறிவோம். நமது மனது திடமாகவும், ஆன்மா ஆர்வம் நிறைந்ததாகவும் இருக்கலாம்; ஆனாலும் நமது உடல் வலுகுன்றியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஜெபிப்பதற்கென்று நேரம் குறித்திடு. அதைத் தவற விடாதே. அரசன் தாவீது நாளுக்கு மும்முறை ஜெபித்தான். தீர்க்கன் தானியேல் நாளுக்கு மும்முறை ஜெபித்தான். இவர்களுக்கெல்லாம் ஏராளம் அலுவல் இருக்கத்தான் செய்தது. சில நேரங்களில் உனக்கு ஜெபிக்க மனமிருக்காது. ஒருவர் இப்படிச் சொன்னார்: ''ஜெபிக்கத் தோன்றினால் ஜெபியுங்கள்; ஜெபிக்கத் தோன்றாவிடினும் ஜெபியுங்கள்; ஜெபிக்கத் தோன்றும்வரை ஜெபியுங்கள்!'' ஜெபிக்க ஜெபிக்கத்தான் ஜெபிக்க விருப்பம் கூடும். பாவச் சோதனைகளுக்கு எதிர்த்துப் போராட நமது ஆன்மீகத் தசைகளுக்கு வலுவூட்டுவது ஜெபமே.

2. திருமறைத் தியானம்

மத்தேயு நற்செய்தி நூலின் 12ஆம் அத்தியாயத்தில், ஒரு மனிதனை விட்டுத் துரத்தப்பட்ட பொல்லாத ஆவியைக் குறித்து வாசிக்கிறோம். காலி வீடு தேடி அது எங்கும் அலைந்ததாம். ஒன்றும் கிடைக்காததால், விட்டுவந்த பழைய வீட்டிற்கே திரும்பியதாம். அது நன்கு சுத்தப்படுத்தப்பட்டு இன்னும் காலியாயிருப்பதைக் கண்டதும், தன்னைவிடக் கொடிய ஏழு ஆவிகளைக் கூட்டிவந்து அதே வீட்டில் குடிபுகுந்ததாம். இதனால் அம்மனிதனின் பிந்திய நிலை முந்தியதைவிடப் படுமோசமாயிற்று. உனது இதயத்தையும் மனதையும் ஒருபோதும் காலியாக வைத்திராதே. அதைத் திருவார்த்தைகளால் நிரப்பிடு. திருப்பாடகன் இவ்விதம் சொன்னான்: சங்கீதம் 119:11, ''ஆண்டவரே, உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு, உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்.'' தீயவற்றிலிருந்து திருமறை உன்னைக் காக்கும்; தீயவை உன்னைத் திருமறைக்கு விலக்கும்!

கிரமமாய் விவிலியத்தைத் தியானிப்பதின் பயன்கள் ஏராளம், ஏராளம். பைபிளில் மிக நீண்ட புத்தகம் சங்கீதங்களின் புத்தகமே. அது எப்படித் துவங்குகிறதென்று கவனி: சங்கீதம் 1:1-3, ''பொல்லாரின் சொல்லின்படி நடவாமலும், பாவிகளின் தீய வழியில் நில்லாமலும், இகழ்வாரின் குழுவில் அமராமலும், ஆண்டவரது திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுற்று, அதை இரவும் பகலும் சிந்திப்பவனே நற்பேறு பெற்றவன். அவன் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல் இருப்பான்; பருவ காலத்தில் கனி தந்து என்றும் பசுமையாயிருக்கும் அம்மரத்திற்கு அவன் ஒப்பாவான்; அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான்.'' பசுமைக்குப் பசுமை! பழத்திற்குப் பழம்! இங்கு பின்மாற்றத்திற்கு இடமெங்கே?

3. தூயாவியானவரின் நிறைவு

நமது சொந்த பலத்தால் நாம் சோதனைகளில் வெற்றிகாண முடியாதென்று முன்னர் கவனித்தோம். எனவேதான் நமக்குள் குடி கொள்ளவும் நம்மை வலுப்படுத்தவும் கடவுள் தூயாவியானவரை அனுப்பினார். தூயாவியானவரால் நீ நிறைந்திருக்கும்போது, பாவத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் சக்தியை அவர் உனக்குத் தருகிறார். பாவச் சுபாவத்தின் செயல்பாடுகளுக்கு விலகியிருக்கவும், அவரது கனியாகத் தெய்வீகப் பண்புகளை வளர்க்கவும் அவர் உனக்கு உதவு கிறார் (கலா 5:19-23).

கடவுள் உன்னைப் பரிசுத்த ஆவியால் நிரப்பிட அவரிடம் கேள். தாகமுள்ளோரைத் திருப்தியாக்குவதாக அவர் வாக்குப்பண்ணியுள்ளார் (யோ 7:37-39). ஆவியானவரால் நிரப்பப்பட்டுள்ள கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஜெபி. பரிசுத்த ஆவியானவர் தரும் புதிய பலத்தால் நீ வெற்றி மேல் வெற்றி அடைவாய்.

4. இறைமக்களுடன் சகவாசம்

தனித்து ஒதுங்கி நின்று கிறிஸ்தவனாய் வாழ்ந்திட முடியாது. மற்ற கிறிஸ்தவ விசுவாசிகளின் உதவி நமக்குத் தேவை. எனவேதான், கிறிஸ்துவின் சபையானது ஓர் உடல் என்றும், கிறிஸ்தவ விசுவாசிகள் அதின் உறுப்புகள் என்றும் அழைக்கப்படுகின்றனர் (1 கொரி 12:24). நமது உடலிலுள்ள எந்த உறுப்பாவது பிற உறுப்புகளோடு சம்பந்தப் படாது செயல்பட முடியுமா? தமது சீடரின் பலக்குறைவுகளை கிறிஸ்து நன்கு அறிந்திருந்தும் அவர்கள் தம்முடன் இருக்க விரும்பினார்.

பைபிளை நன்கு விசுவாசிக்கும் திருச்சபை ஒன்றின் ஆராதனை களில் பங்கேற்பதோடு, ஜெபத்திற்கும், திருமறைத் தியானத்திற்கும், கலந்துரையாடுதலுக்கும் உதவியாகக் கூடிவரக்கூடிய ஒரு சில நண்பர்களைக் கண்டுபிடி. பாபிலோன் நகரில் நான்கு வாலிபருக்கு இவ்வித ஐக்கியம் இருந்தது (தானி 2:17,18). நெருப்பிலிருந்து ஒரு விறகுக் கட்டையை வெளியே எடுத்துவிட்டால் எவ்வளவு நேரம்தான் அதில் அனல் இருக்கும்? தாய்க் கோழியிடமிருந்தும் மற்ற குஞ்சுகளிட மிருந்தும் பிரிந்து அலையும் குஞ்சு எளிதில் கழுகுக்கு இரையாகும் அல்லவா? பிரசங்கி 4:9-12ஐ வாசித்துக் கூட்டு வாழ்வின் முக்கியத் துவத்தைப் புரிந்துகொள்.

5. நற்செய்தி அறிவிப்பு

நீ கிறிஸ்துவிடம் வரும்போது கொழுத்தப்பட்ட மெழுகுவர்த்தி யைப் போலாகிறாய். மற்றவர்களுக்கு ஒளி தரும்படி மெழுகுவர்த் தியை உயரே ஒரு தாங்கிமீது வைக்கவேண்டும். மற்றவர்களுக்கு நாம் ஒளி வீசவேண்டும் என்பதை விளக்க இயேசுவானவர் தந்த எளிய எடுத்துக்காட்டு இது (மத் 5:14-16). அவ்விதமே, தமது பிள்ளைகள் தான் மண்ணுலகிற்கு ''உப்பு'' என்றார் அவர் (வச 13). உணவின்மீது உப்பு தூவப்படாவிடில் பயனென்ன?

கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிறரிடம் சொல்லத் துவக்கத்தில் நீ வெட்கப்படலாம், தயங்கலாம். ஆனால் நீ அவருக்காய்ப் பேசப் பேச விறுவிறுப்படைவாய். பிறரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதற்குத் தேவையான பலத்தைப் பரிசுத்த ஆவியானவர் தருகிறார் (அப் 1:8). முன்னர் கோழைகளாயிருந்த கிறிஸ்துவின் சீடர் தூயாவியானவரால் நிரப்பப்பட்ட பின்னரோ தைரியசாலிகளானார்கள் (அப் 4:31). பிறரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதால் உனக்குக் கிடைக்கும் மகிழ்ச்சிப் பெருக்கினால் இவ்வுலகப் பாவச் சிற்றின்பங்களை உதறித்தள்ளுவாய்.

6. துவக்கங்களுக்கு எச்சரிக்கை!

பின்மாற்றம் என்பது திடீரென நடப்பதல்ல. அது படிப்படியாகவே நிகழும். சங்கீதம் 19:12,13இல் அரசன் தாவீது படிப்படியான சரிவை விளக்குகிறான். முதலில் அது ''பிழைகள்'' என்றுதானிருக்கும்; அடுத்து ''மறைவான குற்றங்கள்'' என்றாகும்; பின்னர் அது ''துணிகர மான பாவங்களுக்கு'' நடத்தும்; முடிவில் அது ''பெரும் பாதகம்'' ஆகி விடும். துவக்கத்தில் கவலையீனம் எல்லாவற்றையும் கெடுத்துவிடும். முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்!

தலைக்குமேல் கழுகு பறப்பதைத் தடுக்க முடியாது; ஆனால் அது தலையில் கூடுகட்டுவதைத் தடுக்கலாமே! சோதனைகளை சிந்தனை யிலேயே கட்டுப்படுத்திவிடவேண்டும். சிந்தனைகள் சொற்களாகவும், சொற்கள் செயல்களாகவும் உருவெடுத்துவிடும். பாலியல் தோல்வி களுக்கு முதற்காரணம் பார்வை, அடுத்தது பேச்சு, முடிவில் தொடுதல். சோதனைகளுக்குக் காரணமான இடங்களையும் நபர்களையும் தவிர்த் திடு. இளவயதின் இச்சைகளோடு ''போராடக்'' கூடாது; அவைகளை விட்டு ''ஓடிவிட'' வேண்டும் (2 தீமோ 2:22).

7. பிரச்னைகளையல்ல, கிறிஸ்துவையே பார்த்தல்

கிறிஸ்தவ வாழ்வில் ஏராளம் பிரச்னைகள் இருக்கும். அவைகளில் பலவற்றிற்குத் தீர்வே இருக்காது. அவைகளை வெற்றிகரமாய்க் கையாளக் கற்றுக்கொள்ளவேண்டும். வெற்றி வாழ்வு என்பது பிரச்னைகள் இல்லாமை அல்ல; அவற்றிற்குமேல் எழுந்துவிடுதல். கிறிஸ்து வானவர் நமது விசுவாசத்தைத் துவக்குபவர் மட்டுமல்ல, அதை நிறைவுசெய்பவரும் அவரே (எபி 12:1). நாம் அவரையே பார்த்து வாழவேண்டும். இப்படித்தான் நமது ஓட்டப் பந்தயத்தில் வெற்றி காணலாம். ''மகனே, மகளே, நன்றாய் ஓடி முடித்தாய்'' என்று உன்னைக் கரங்கொட்டி வரவேற்க ஆண்டவர் முடிவுக்கோட்டில் நிற்கிறார்!

இந்த 7 அறிவுரைகளையும் நீ மனதிற்கொண்டிருந்தால், பின் மாறுவது சுலபமல்ல.

(இ) நீ ஏற்கனவே பின்மாறியிருந்தால் ...

பின்மாற்றத்தின் சில அறிகுறிகள் இதோ: பாவம் செய்யத் தயக்கமின்மை, ஜெபத் தியானப் பழக்கங்களில் விருப்பமின்மை, தேக்கத்திற்கு நடத்தும் திருப்தி.

நீ பின்மாற்றமடைந்துள்ளாய் என்று நீ நினைத்தால், இன்றே கிறிஸ்துவிடம் திரும்பிவிடு. மார்க்கவுலகை நோக்கி யூதாசைப்போல் ஓடாதே. இயேசுவிடம் பேதுருவைப்போல் வந்துவிடு. அவரது இரத்தத்தினால் கழுவப்பட முடியாத பாவமே கிடையாது (ஏசா 1:18; 1 யோ 1:7-9). கருணையிலும் மன்னிப்பிலும் நமது ஆண்டவரைப்போல் எவருமில்லை (தானி 9:9; சங் 130:3,4). வீட்டை விட்டு ஓடிப்போன அந்த கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது, அவன் தனது பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கையிடுவதில் தந்தைக்கு ஆர்வமன்று! நாறிக்கொண்டிருந்த அவனைத் தந்தை அப்படியே அரவணைத்து முத்தமிட்டார் (லூக் 15:20-24). வீட்டில் ஆடலென்ன, பாடலென்ன, விருந்தென்ன! ''எனது மகன் இறந்துபோனான்; இப்பொழுது உயிர்த்துவிட்டான்'' எனத் தந்தை குதூகலித்தார். (அட்டைப் படம்)

மகனே, மகளே, நீயும் கடவுளை விட்டு விலகிப் பன்றிகள்போல் வாழ்ந்துகொண்டிருக்கலாம். அவருக்கு இவ்வளவு துரோகம் செய்துவிட்ட உன்னை அவர் திரும்பவும் ஏற்றுக்கொள்வாரோ என்று

நினைக்கவே வேண்டாம். ''என்னிடம் வருபவனை நான் ஒருபோதும் தள்ளிவிடுவதில்லை'' என்பதே இயேசுவின் அருள் வாக்கு (யோ 6:37).

நான் பாவிதான் — ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்;
''வா'' என்று என்னை அழைத்தீர்;
என் மீட்பரே வந்தேன், வந்தேன்!

(இக்கட்டுரையின் ஆசிரியர் வாலிபர் விண்ணொளி முகாம் 2004இல் பிரசங்கித்த இச்செய்தி ஒரு mp3 ஒலித்தட்டிலும் உண்டு. ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம். விலை ரூ. 50/-. அனுப்பச் செலவு ரூ. 30/-)

✸ ✸ ✸

வாலிபர், நங்கையருக்கென்றே எழுதப்பட்ட கீழ்க்கண்ட நூல்களை வாசியுங்கள் —

- By R. ஸ்டான்லி, B.E. M.Tech.
  - *To Dear Students ...*
    மாணவ மணிகளுக்கு ... ... ரூ. 30/-
  - *Dare to be Different!*
    எதிர்நீச்சல் வாலிபர் ... ரூ. 60/-
    (www.stanleyonbible.com)
- By Dr. லில்லியன் ஸ்டான்லி, MBBS, DCH.
  - *Sweet Sixteen*
    வயது பதினாறிருக்கும் ... ரூ. 40/-
  - *World of Youth*
    வாலிப உலகம் ,,, ரூ. 35/-
  - *Girls & Guys*
    பசங்க, பொண்ணுங்க... ... ரூ. 50/-
    (www.lilianstanley.com)

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org> www.bymonline.org